# பெல்மதுள்ள பிரதேச சபையின் 2025.12.10 ஆம் திகதி நடைபெற்ற பொது சபைக் கூட்டத்தின் அறிக்கை

பெல்மதுள்ள பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டம் 2025 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் தலைமையில் பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள கொரவ பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

02. கௌரவ பிரதேச சபை உப தலைவர் - திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன
03. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.டி.டப்ளிவ். சோமரத்ன
04. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம
05. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன
06. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அபேவர்தன
07. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.ஜீ. சந்திரலால்
08. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே
09. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க
10. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர
11. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார
12. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர
13. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசன்த்த பிரேமகுமார
14. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த்த
15. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார
16. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். வசன்த குமாரசிறி
17. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ. இந்திக்க குமார
18. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
19. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா
20. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி
21. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட
22. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ.கே. சுமேத லக்மால்
23. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன
24. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க
25. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின
26. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி
27. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ்
28. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. இராஜரத்தினம் புவனேஸ்வரி
29. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன
30. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். ஜெஹன் மோஹன்
31. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ்.டப்ளிவ். மொஹான் மஞ்சுல

வருகைதந்து இருந்த அனைவரும் தமது சமய அனுட்டானங்களை பின்பற்றி, கூட்டத்திற்கு வருகைதந்து இருக்கும் கௌரவ உப தலைவர், கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட ஆளும் கட்சி எதிர் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் கௌரவ தலைவர் அவர்கள் வரவேற்றதுடன் கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

திட்டா புயல் காரணமாக ஏற்பட்ட இயற்கை அனர்தங்களினால் பாதிக்கப்பட்ட மற்றும் உயிரிழந்த எமது நாட்டு மக்களுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

01. **கடந்த பொது சபைக் கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றிக் கொள்ளல். (2025.11.12)**

2025.11.12 ஆம் திகதி நடைபெற்ற விசேட பொது சபைக் கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்கள் ஆமோதித்ததன் பின்னர் ஏகமனதாக சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ. டப்ளிவ். சோமரத்ன, கடந்த பொது சபை கூட்டத்தில் நாங்கள் வரவு செலவு திட்டத்திற்கு எதிராக கருத்துக்கள் தெரிவித்து உள்ளோம். கடந்த வருடங்களில் வரவு செரவு திட்ட வரைவுகள் விசேட சபை கூட்டம் கூடி இது தொடர்பாக கலந்தாலோசித்து வரவு செலவு திட்டங்கள் முன்வைக்கப்பட்டன, ஆனால் இது விதிகளுக்கு அமைய முரனாக செயற்பட்டு உள்ளது என்றும். இந்த விதிகளுக்கு ஏற்ப ஒருங்கிணைக்கப்பட்ட செயற்குழு ஒன்றை கூட்டி வரவு செலவு திட்ட வரைபை முன்வைக்க வேண்டும் என்றும், இதற்கு அமைய ஒருங்கிணைக்கப்பட்ட செயற்குழு ஒன்றை கூட்டாமல் வரவு செலவு திட்ட வரைபு முன்வைக்கப்பட்டு உள்ளது என்றும், அதன் அடிப்படையில் வரவு செலவு திட்ட வரைபை வரவு செலவு திட்டமாக தொடர்புபடுத்தி அனுமதி அளிக்கப்படுமாயின் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்குழு அறிக்கை ஒன்று இருக்க வேண்டும் என்றும், மேலும் இந்த பிரதேச சபை வரலாற்றில் வரவு செலவுத் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டதன் பின்னர் பேனர் ஒன்று காட்சிப்படுத்தியமை

இதுவே முதல் முறை என்றும், கடந்த காலங்களில் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பங்களில் இருந்த போதிலும் அதற்காக ஆதரவாக மற்றும் எதிராக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. முறையான தினம் ஒன்றில் வரவு செலவுத் திட்டத்தை முன்வைத்து நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்றும், ஆனால் இந்த விதிகள் மீறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக கடுமையான எதிர்பை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், வரவு செலவுத் திட்ட வரைபு பொதுச் சபையில் முன்வைக்கப்பட்டதாகவும், வரவு செலவுத் திட்ட வரைபு முன்வைக்கப்பட்ட போது கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன மற்றும் எதிர்கட்சி உறுப்பனர்கள் இந்த வரவு செலவுத் திட்ட வரைபு தொடர்பாக ஒரு பிரிவு அவசியம் என்று கூறியதாகவும், அந்த சந்தர்ப்பத்தில் பொதுச் சபையை செயற்குழுவாக கருதி வரவு செலவுத் திட்ட வரைபு தொடர்பாக பிரச்சினைகள் இருப்பின் தீர்த்துக் கொண்டதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த்த பிரேமகுமார அவர்கள் கூறினார்.

அந்த சந்தர்ப்பத்தில் எவ்விதமான திருத்தங்களும் முன்வைக்கப்படவில்லை என்றும், திருத்தங்கள் முன்வைக்கப்படாததன் காரணத்தினால் வரவு செலவுத் திட்டம் சபையில் நிறைவேற்றப்பட்டதாக கூறப்பட்டது. ஆதரவாக மற்றும் எதிராக வாக்குகள் அளிக்கப்பட்டு வரவு செலவுத் திட்டம் சபையில் நிறைவேற்றப்பட்டதாக கூறப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பில் இரண்டு சந்தர்ப்பங்களில் கலந்து ஆலோசிக்கப்பட்டதாகவும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ. டப்ளிவ். சோமரத்ன அவர்கள் இக் கூட்டங்களுக்கு பங்குபற்றவில்லை என்றும், அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களுக்கு இரண்டாவது கூட்டம் அதாவது ஒருங்கிணைந்த செயற்குழுக் கூட்டம் 2025.10.08 ஆம் திகதி பொதுச் சபை கூட்டம் முடிவடைந்த பின்னர் பி.ப. 02.50 இற்க நடாத்தப்பட்டதாகவும், வரவு செலவுத் திட்ட வரைபு தொடர்பாக முழுமையான விளக்கங்கள் மற்றும் அவற்றின் பிரிவுகள் தொடர்பாகவும், முற்பண நிலைமைகள் தொடர்பாகவும், செலவு தலைப்புக்கள் தொடர்பாகவும் இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் வரவு செலவுத் திட்ட வரைபு அனுமதி பெறுவதற்கு பொதுச் சபைக்கு முன்வைக்கப்பட்டதாகவும் அதற்காக எவ்வித திருத்தங்களும் முன்வைக்கப்படவில்லை என்றும், பொதுவாக கருத்துக்கள் மாத்திரம் தெரிவிக்கப்பட்டதாகவும், வரவு செலவுத் திட்ட வரைபு தொடர்பாக எவ்வித திருத்தங்களும் முன்வைக்கப்படாததன் காரணத்தினால் வரவு செலவுத் திட்ட வரைபை அனுமதிப்பதற்கான பிரேரணை முன்வைக்கப்பட்டதன் பின்னர் ஒரு பிரிவு வேண்டும் என்று கோரப்பட்டதன் காரணத்தினால் வாக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் வரவு செலவுத் திட்டம் சபையில் நிறைவேற்றப்பட்டதாகவும், இந்த வரவு செலவு திட்டமானது சட்டபூர்வமாக நிறைவேற்றப்பட்ட ஒரு முறையான வரவு செலவுத் திட்டம் என்றும், இதன் காரணமாக மீண்டும் இந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பாக சபையினுள் விவாதிப்பது அவசியம் அற்ற ஒரு விடயம் என்று கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**02. கௌரவ தலைவர் அவர்களினால் சபைக்கு முன்வைக்க வேண்டிய அறிவித்தல்கள். –**

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எச்.ஜீ. சச்சினி செவ்வந்தி அவர்கள் 2025.11.14 மற்றும் 2025.12.05 ஆம் திகதியுடைய கடிதங்கள் மூலம் பெல்மதுள்ள பிரதேச சபை உறுப்பனர் பதவியில் இருந்து விலகுவதாக தெரியப்படுத்தி உள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

**03. பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்காமை தொடர்பாக அனுமதி பெறல் சம்பந்தமான பிரேரணை**

மருத்துவ காரணங்களுக்காக பொது சபை கூட்டத்திற்கு சமூகம் அளிக்க முடியாது என்று அறிவித்துள்ள கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. மயுரி சத்துரிகா பரணமான்ன, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். திசோக், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சான்த புஸ்பகுமார குடாவத்த ஆகியோரின் லீவுகள் அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர அவர்கள் ஆமோதித்தார்.

மருத்துவ காரணங்களுக்காக பொது சபை கூட்டத்திற்கு சமூகம் அளிக்க முடியாது என்று அறிவித்துள்ள கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். தனேஸ் குமரன் ஆகியோரின் லீவுகள் அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் ஆமோதித்தார்.

04. **கௌரவ சபைக்கு அனுப்பப்பட்டுள்ள நினைவுக்குறிப்புக்கள், பொதுமக்களின் புகார்கள், முறைப்பாடுகள் பொது சபைக்கு முன்வைத்தல் :-**

வெலிமலுவ தொடம்கஹ நீரோடைக்கு அருகில் வாழும் மக்கள் 2025.12.05 ஆம் திகதி வெள்ள அபாய நிலமைகளை குறைத்துக் கொள்ளும் பொருட்டு வெலிமலுவ தொடம்கஹ நீரோடைக்கு அருகில் சுமார் 30 குடும்பங்கள் வரை வாழ்வதாகவும் அதிக மழைவீழ்ச்சி கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தொடம்கஹ நீரோடையில் வெள்ள அபாயம் ஏற்படுவதால் சுமார் 20 வீடுகள் விரைவாக வெள்ள நீரில் மூழ்கும் அபாயத்தில் உள்ளன. இதற்கு முக்கிய காரணங்களாக முறையற்ற நிர்மாணங்கள் மற்றும் முறையற்ற காணி நிரப்பல்கள் போன்றன காணப்படுகின்றன. அதுபோல் வெலிமழுவ 50 ஏக்கர் வீதிக்கு அருகில் உள்ள திரு. குணதிலக என்பவரின் கடைக்கு அருகில் உள்ள நீரோடையின் நடுவில் உள்ள பாரிய கல் காரணமாக நீரோடையில் நீர் விரைவாக வழிந்து செல்வதற்கு தடையாக உள்ளது. நீரோடையில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் சந்தர்ப்பங்களில் இந்த கல்லினால் நீர் விரைவாக வழிந்து செல்வது தடைப்பட்டு மேல் பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. இதனால் இந்த கல்லை உடைத்து அப்புறப்படுத்தினால் நீரோடையில் நீர் வடிந்து செல்வதற்கு உள்ள இடையூறுகள் குறைந்து வெள்ளப் பெருக்கு அபாய நிலமை கட்டுப்பாட்டிற்குள் வரும். வருங்காலங்களில் ஆபத்து நிலமைகள் ஏற்படுவதற்கு உள்ள வாய்ப்புக்களை குறைத்துக்கொள்வதற்கு இந்த இடத்தை பரிசோதித்து இடையூறாக உள்ள கல்லை அப்புறப்படுத்திக் தருமாறு கோரப்பட்டு உள்ள கடிதத்தை கொளவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

**05. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிணக்குகள் :- இல்லை**

**06. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிரேரணைகள்**

1. **கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

1. 2026 ஆம் ஆண்டிற்கான பொதுச் சபை கூட்டமானது ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வாரத்தின் புதன் கிழமை நடாத்துவது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 01**

2026 ஆம் ஆண்டிற்கான பொதுச் சபை கூட்டமானது ஒவ்வொரு மாதமும் இரண்டாம் வாரத்தின் புதன் கிழமை நடாத்துவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

2. பெல்மதுள்ள பிரதேச சபையின் சூழல் உள்ளக கொள்கைக்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 02**

பெல்மதுள்ள பிரதேச சபையின் சூழல் உள்ளக கொள்கைகள் தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு பெல்மதுள்ள பிரதேச சபையின் சூழல் உள்ளக கொள்கை ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

03. பெல்மதுள்ள கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் முறையற்ற விதத்தில் கட்டப்பட்டுள்ள வீடமைப்புக்கள் நெறிப்படுத்துவதற்கு பின்பற்றுவதற்கான உள்ளக கொள்கைக்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. டப்.எம். சிறியாணி வீரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 03**

பெல்மதுள்ள கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் முறையற்ற விதத்தில் கட்டப்பட்டுள்ள வீடமைப்புக்கள் நெறிப்படுத்துவதற்கு பின்பற்றுவதற்கான உள்ளக கொள்கைகள் தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு பெல்மதுள்ள பிரதேச சபையின் முறையற்ற விதத்தில் கட்டப்பட்டுள்ள வீடமைப்புக்கள் நெறிப்படுத்துவதற்கு பின்பற்றுவதற்கான உள்ளக கொள்கை ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

04. 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், எதிர்வரும் வருடத்திற்கான வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரிப்பதற்கு புரிந்துணர்வு பெற்றுக்கொள்வதற்கும் திருத்தங்கள் முன்வைப்பதற்கும் சிறிது காலம் பெற்றுத் தருமாறு கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், எதிர்வரும் வருடத்திற்கான வருடாந்த செயற்பாட்டு திட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கு அனுமதி வழங்குவதற்கு சிறிது காலம் வழங்குமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இவற்றை அனுமதிப்பது உகந்தது என்றும் வருங்காலத்தில் திருத்தங்கள் முன்வைக்க முடியும் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 04**

2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயற்பாட்டு திட்டம் தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயற்பாட்டு திட்டம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

05. 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த பயிற்சி திட்டத்திற்கான (மனிதவள அபிவிருத்தி திட்டம்) அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 05**

2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த பயிற்சி திட்டம் (மனிதவள அபிவிருத்தி திட்டம்) தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த பயிற்சி திட்டம் (மனிதவள அபிவிருத்தி திட்டம்) ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

06. 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கொள்முதல் திட்டத்திற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 06**

2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த கொள்முதல் திட்டம், வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த கொள்முதல் திட்டம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

07. 2025 ஆம் ஆண்டிற்கான பொருள் ஆய்வுக்காக நியமிக்கப்பட்டு உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் ஆய்வுக் கமிட்டிக்கு அதிகாரங்கள் வழங்குவதற்கு பிரேரிக்கின்றேன்.

1. தலைவர் - திருமதி. ரீ.எம்.வீ.எஸ். தென்னகோன்
2. உறுப்பினர் - திரு. ஜே.எம்.எஸ்.கே. பண்டார
3. உறுப்பினர் - திருமதி. டீ.ஜே.அயி.கே. ஜயதுங்க
4. உறுப்பினர் - திருமதி. ஜே.டி.என். சந்திமா
5. உறுப்பினர் - செல்வி. எஸ். இரத்னாவதி
6. உறுப்பினர் - திரு. கே.ஜே. உபநந்த
7. உறுப்பினர் - திருமதி. ஏ.பி.எஸ். சேனாரத்த
8. உறுப்பினர் - திருமதி. டப்.எம்.ரீ. ஹர்சனீ
9. உறுப்பினர் - திருமதி. பி.கே.டப்.எஸ். விஜேலதா
10. உறுப்பினர் - திருமதி. டப்.டி.ஆர். விஜேரத்ன
11. உறுப்பினர் - திருமதி. ஆர்.ஏ.டி.பி. இரணசிங்க
12. உறுப்பினர் - திருமதி. ஆர்.ஏ.டி.ஆர். இரணசிங்க
13. உறுப்பினர் - திருமதி. பி.எம்.என்.பீ. குணதிலக
14. உறுப்பினர் - திருமதி. கே.எச்.ஜே. ஜயசிங்க
15. உறுப்பினர் - திருமதி. எச்.கே.ஆர். சொயிசா
16. உறுப்பினர் - திருமதி. எம்.பி.வயி. நிமேஷிகா

17. உறுப்பினர் - திருமதி. கே.எம்.டி.எஸ். செனெவிரத்ன
18. உறுப்பினர் - திருமதி. எம்.வீ.ஏ. புஷ்பசூரிய
19. உறுப்பினர் - திருமதி. எம்.ஏ. ஷமிலா குமாரி
20. உறுப்பினர் - திரு. பி.எம்.எஸ்.அயி. யோகரத்ன
21. உறுப்பினர் - திரு. எச். ஜயசஜங்க
22. உறுப்பினர் - திருமதி. கே.எம்.என். குணரத்ன
23. மேற்பார்வை உத்தியோகத்தர் - திருமதி. எம்.பீ.எஸ். மல்லிகா (பிரஜை அபிவிருத்தி உத்தியோகத்தர் – உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் அலுவலகம் )

இரண்டு பிரதேச சபை கௌரவ உறுப்பினர்கள்

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

மேலே குறிப்பிட்ட கமிட்டிக்கு நியமிக்கப்படும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர்களாக, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார, கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்ன ஆகியோர் தகுதியானவர்கள் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்கள் பிரேரித்தார்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07**

2025 ஆம் ஆண்டிற்கான பொருள் ஆய்வுக்காக நியமிக்கப்பட்டு உள்ள மூன்று பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட நியமிக்கப்பட்டு உள்ள மேற்குறிப்பிட்ட பொருள் ஆய்வு கமிட்டிக்கு அதிகாரங்கள் வழங்குவதற்கு முன்வைக்கப்பட்ட பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

08. 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட இடர் முகாமை திட்டத்திற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.ஏக. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 08**

2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட இடர் முகாமை திட்டம் தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட இடர் முகாமை திட்டம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

09. 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெல்மதுள்ள பிரதேச சபையின் உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 09**

2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெல்மதுள்ள பிரதேச சபையின் உள்ளக கணக்காய்வு திட்டம் தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெல்மதுள்ள பிரதேச சபையின் உள்ளக கணக்காய்வு திட்டம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

10. பெல்மதுள்ள பிரதேச சபையின் திண்ம கழிவு அகற்றல் திட்டம் (2026-2030) இற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டீ.எல். யுரெஸ் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 10**

பெல்மதுள்ள பிரதேச சபையின் திண்ம கழிவு அகற்றல் திட்டம் (2026-2030) தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு

உட்பட்டு பெல்மதுள்ள பிரதேச சபையின் திண்ம கழிவு அகற்றல் திட்டம் (2026-2030) ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

11. 2026 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமை கமிட்டி திட்டத்திற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு மற்றும் நான்கு காலாண்டுகளுக்கான கணக்காய்வு மற்றும் முகாமை கமிட்டி கூடும் நாட்களாக 2026.03.25, 2026.06.24, 2026.09.23, 2026.12.16 ஆம் திகதிகளை குறிப்பிடுவதற்கான பிரேரணையை முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 11**

2026 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமை கமிட்டி தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 2026 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமை கமிட்டி திட்டம் மற்றும் நான்கு காலாண்டுகளுக்கான கணக்காய்வு மற்றும் முகாமை கமிட்டி கூடும் நாட்களாக 2026.03.25, 2026.06.24, 2026.09.23, 2026.12.16 ஆம் திகதிகளை குறிப்பிடுவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

12. 2026 ஆம் ஆண்டிற்காக பதிவுசெய்து கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டு உள்ள வழங்கற்காரர்களை, பதிவுசெய்யப்பட்ட வழங்கற்காரர்கள் என ஏற்றுக்கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 12**

2026 ஆம் ஆண்டிற்காக பதிவுசெய்து கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டு உள்ள வழங்கற்காரர்களை, பதிவுசெய்யப்பட்ட வழங்கற்காரர்கள் என ஏற்றுக்கொள்வது தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 2026 ஆம் ஆண்டிற்கான பதிவுசெய்து கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டு உள்ள வழங்கற்காரர்களை, பதிவுசெய்யப்பட்ட வழங்கற்காரர்கள் என ஏற்றுக்கொள்வது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

13. அரச வேவைகளின் போது டிஜிடல் கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள நிகழ்நிலை பணப்பரிவர்தனை ஊடகமான GovPay வசதிகளை பெற்றுக்கொடுப்பது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 13**

அரச வேவைகளின் போது டிஜிடல் கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதற்காக GovPay வசதிகளை பெற்றுக்கொடுப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

14. பொரோனுவ வீதி, பதலகொடுவ என்ற இடத்தில் அசேல கழுவல லியனகே என்ற நபர் நிர்மாணித்துள்ள அவதானமான மதில் சுவரிற்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக சட்டத்தரணி திரு. தரிந்து எருவ்வல அவர்களுக்கு ரூபா. 47,500.00 தொகை சட்டத்தரணி கட்டணம் செலுத்துவதற்கு அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 14**

பொரோனுவ வீதி, பதலகொடுவ என்ற இடத்தில் அசேல கழுவல லியனகே என்ற நபர் நிர்மாணித்துள்ள அவதானமான மதில் சுவரிற்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக சட்டத்தரணி திரு. தரிந்து எருவ்வல அவர்களுக்கு ரூபா. 47,500.00 தொகை சட்டத்தரணி கட்டணம் செலுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

15. 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மழைநீர் வடிகால் தொகுதி பராமரிப்பு, வீதிகள் பராமர்ப்பு தொடர்பான திட்டத்திற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. டப்.எம். சிறியாணி வீரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 15**

2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மழைநீர் வடிகால் தொகுதி பராமரிப்பு, வீதிகள் பராமர்ப்பு தொடர்பான திட்டம் தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மழைநீர் வடிகால் தொகுதி பராமரிப்பு, வீதிகள் பராமர்ப்பு தொடர்பான திட்டம் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

16. 2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மயானபூமி பராமரிப்பு திட்டத்திற்காக அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப். வசந்த குமாரசிறி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், மயானபூமி பராமரிப்பு தொடர்பில் உரிய மரண ஆதார சங்கங்களை தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மயானபூமிகளுக்கு அருகில் வாழும் மக்கள் இந்த மயானபூமி காணிகளை அபகரித்துக் கொள்கிறார்கள் என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த மயானபூமி தொடர்பில் களப் பரிசோதனை ஒன்று மேற்கொள்வதற்கு பிரதேச சபை உறுப்பினர்களை கொண்ட கமிட்டி ஒன்று உருவாக்கப்பட்டு உள்ளது என்றும், அதன் போது அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களும் தமது கட்டுப்பாட்டு பிரதேசத்தல் உள்ள மயானபூமிகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 16**

2026 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட மயானபூமி பராமரிப்பு திட்டம் தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 2026 ஆம் ஆண்டிற்கான தயாரிக்கப்பட்ட மயானபூமி பராமரிப்பு திட்டம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

17. பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் சிரேஸ்ட பிரஜைகள் தொடர்பிலான உள்ளக கொள்கைக்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ரீ.கே. சம்பத் சிறிசாந்த அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 17**

பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் சிரேஸ்ட பிரஜைகள் தொடர்பிலான உள்ளக கொள்கை தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் சிரேஸ்ட பிரஜைகள் தொடர்பிலான உள்ளக கொள்கை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

18. பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் அங்கவீனர்கள் தொடர்பிலான உள்ளக கொள்கைக்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 18**

பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் அங்கவீனர்கள் தொடர்பிலான உள்ளக கொள்கை தொடர்பில் வருங்காலத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஏற்படுமாயின் அத் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் அங்கவீனர்கள் தொடர்பிலான உள்ளக கொள்கை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

19. பெல்மதுள்ள பிரதேச சபையில் நாளாந்த சம்பள அடிப்படையில் சேவை புரியம் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள ஊழியர்கள் 2026.01.01 ஆம் திகதியில் இருந்து 2026.12.31 ஆம் திகதி வரை ஒரு வருட காலத்திற்கு சேவை ஒப்பந்தத்தை நீடிப்பது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

1. திரு. எம். அனில் உதயராஜ் - சாரதி
2. திரு. அனுர த சில்வா - சுகாதார தொழிலாளி
3. திரு. எச்.டப். மஞ்சுல விஜேதீர - காவலாளி
4. திருமதி. எச். வசன்தா - சுகாதார தொழிலாளி

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 19**

பெல்மதுள்ள பிரதேச சபையில் நாளாந்த சம்பள அடிப்படையில் சேவை புரியம் கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள ஊழியர்கள் 2026.01.01 ஆம் திகதியில் இருந்து 2026.12.31 ஆம் திகதி வரை ஒரு வருட காலத்திற்கு சேவை ஒப்பந்தத்தை நீடிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. திரு. எம். அனில் உதயராஜ் - சாரதி
2. திரு. அனுர த சில்வா - சுகாதார தொழிலாளி
3. திரு. எச்.டப். மஞ்சுல விஜேதீர - காவலாளி
4. திருமதி. எச். வசன்தா - சுகாதார தொழிலாளி

20. அனுமதிப்பத்திரதாரர் திருமதி. டப்.பி.எம். ஹிருணி நவோத்யா பஸ்நாயக அவர்களுக்கு உரித்தான மாணிக்க கல் அகழ்வு சுரங்கம் காரணமாக கல்லெபிட தகனசாலை அமைந்துள்ள காணிக்கு தோண்டப்பட்டுள்ள சுரங்கத்தில் இருந்து பெறப்பட்ட மாணிக்க மண் தொடர்பாக வருங்கால நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உகந்த முடிவு ஒன்றை எடுப்பதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டீ.எம். மஞ்சு தசனாயக அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டீ.எம். மஞ்சு தசனாயக இந்த செயற்பாட்டில் இருந்து தன்னை விடுவிக்கும் படி கூறினார். மேலும் மாணிக்க கல் அகழ்வதற்கு அடிப்படை காரணமாக அமைந்தது அவ் இடத்தில் உள்ள கிணற்றில் மாணிக்க கல் அகழப்பட்டது தான். சிலின்டர் இறக்கப்பட்டு உள்ள கிணற்றில் தண்ணீர் வற்றிய பின்னர் மீண்டும் ஒரு கிணறு வெட்டப்பட்டுள்ளது என்றும், அதற்கு சிலின்டர்கள் இறக்கப்படவில்லை என்றும், அந்த கிணறு தண்ணீர் பெறுவதற்கு மாத்திரம் அல்ல என்றும், இங்கே மாணிக்க கற்கள் தொடர்ந்து அகழப்படுவதாகவும் பல தடவைகள் இந்த செயற்பாடுகள் தொடர்பில் பொது சபையில் ஆலோசிக்கப்பட்ட போது அப்போது இருந்த பிரதேச சபை தலைவர் அவ் மாணிக்க கல் அகழ்வு நடவடிக்கைகள் நடைபெறுமாயின் பிடித்து தருமாறு கூறியுள்ளார். அப்படி பிடிக்கும் போது பிரதேச சபைக்கு சொந்தமான பொருட்கள் இருந்ததாகவும், எழுத்து மூலமான புகார் ஒன்றாக மஞ்சு தசநாயக மற்றும் சாட்சியாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பெயர் குறிப்பிட்டு உள்ளனர். மேலும் இந்த எழுத்து மூலமான புகாரை பார்க்க முடியும் என்றும், மாணிக்க கற்கள் கிடைத்ததாக சில வியாபாரிகளிடம் இருந்து தெரிந்து கொண்டதுடன் அவர்கள் அகழ்வு மேற்கொள்ளப்பட்டதாகவும் சுரங்கம் தகனசாலை காணிக்கு உள் வந்ததாகவும் கூறினர். சுரங்கம் சென்றது தெரிந்தும் மாணிக்க மண் அகழப்பட்டு தமது இஸ்டத்திற்கு ஏற்ப கழுவினர், தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு மாணிக்க கற்களை கையகப்படுத்தியதுடன் தற்போது அந்த மாணிக் கற்களின் பெருமதியில் 20% எங்கள் பிரதேச சபைக்கு கிடைப்பதாகவும், இந்த மாணிக்க கற்கள் நபர் ஒருவரிடம் இருப்பதாகவும், இந்த செயற்பாட்டை விரைவாக முடிக்குமாறு கௌரவ பிரதேச சபை தலைவரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டு உள்ளதாகவும் கூறினார்.

அதன் பின்னர் தகவல்கள் தெளிவுபடுத்தப்பட்டதன் பின்னர் அந்த மாணிக்க கற்கள் மீண்டும் ஒரு முறை உறையிட்ட முத்திரை இடப்பட்டு முறையான விசாரணை மேற்கொண்டு ஏலம் விடுவதற்கு முடிவு செய்யப்பட்டது. சந்தேகம் படும் விதத்தில் இந்த விடயம் காரணமாக தன்னை விபத்துக்கு உள்ளாக்கியதாகவும் அன்று எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்றும் மூன்று நாட்களுக்கு பின்னர் தனது குழந்தைக்கு விபத்து ஒன்றை ஏற்படுத்தியதாகவும் கூறப்பட்டது. தற்போது வரை அந்த விபத்து காரணமாக குழந்தை சிகிச்சை பெற்று வருவதாகவும், இதன் காரணமாக தன்னை இந்த விடயத்தில் இருந்து நீக்குமாறும், எழுத்து மூலமான புகார் ஒன்றை தர முடியாது என்றும், இந்த செயற்பாட்டை மேற்கொண்டால் கௌரவ தலைவர் நம்பும் மேல் மட்ட உத்தியோகத்தர்கள் கூட இந்த விடயத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் என்பது தெரிய வரும் என்று கூறினார்.

கருத்து தெரிவிக்கையில், கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. டி.எம். மஞ்சு தசனாயக அவர்கள் இந்த செயற்பாட்டில் இருந்து விலகினாலும் தான் விலகுவது இல்லை என்றும், தேசிய மக்கள் சக்தி அரசு சட்டத்தை அமுல்படுத்தும் என்றும் நீதி மற்றும் சாதாரணத்தை புதைப்பதற்கு இடம் கொடுக்காது என்றும், நீங்கள் எதிர்பார்த்த சாதாரணத்தை நிறைவேற்றுவோம் என்றும், மாணிக்க அகழ்வு சுரங்கத்தில் கழுவும் போது பிரதேச சபையின் ஏணி, தண்ணீர் மோட்டர் என்பவற்றை பெற்றுக் கொண்டது தகனசாலை என்றும் அந்த சந்தர்ப்பத்தில் தண்ணீர் மோட்டருக்கு மின்சாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டடு தகனசாலை மூலம் என்றும், அந்த சந்தர்ப்பத்தில் வீட்டின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு இருக்கவில்லை என்றும், அவற்றிற்கு சாட்சிகள் இருந்நதாகவும், வெளியே எடுக்கப்பட்ட மாணிக்க மண் வெளியில் கொண்டு செல்லப்பட்டு உள்ளதாகவும் இது தொடர்பாக சட்டம் தன் கடமையை செய்யவில்லை என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. டி.எம். மஞ்சு தசனாயக அவர்கள் இந்த விடயத்தை விரைவில் முடிக்குமாறு கௌரவ தலைவருக்கு கடிதம் ஒன்று முன்வைத்து உள்ளது என்று தெளிவாக குறிப்பிட்டு உள்ளார் என்றும், கடிதத்தில் அது போல் குறிப்பிடப்பட்டு இல்லை என்றும் அது இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பணிப்பாளரின் தவறுதலான புரிதல் என்றும், அந்த கடிதத்தில் இது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும்படி குறிப்படப்பட்டு இருந்ததாகவும், மாணிக்க கற்கள் கழுவப்பட்டால் அந்த மாணிக்க கற்களை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும் என்று இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை சட்டத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளபோதிலும் அச் செயற்பாடுகள் இது தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு இல்லை என்றும், இது சட்டவிரோதமான செயல் என்றும், மாணிக்க கல் பெட்டி திறக்கப்படவில்லை என்றும், அந்த பெட்டியில் மாணிக்கக் கற்கள் உள்ளனவா அல்லது இல்லையா என்று தெரியாது என்றும், அந்த சந்தர்ப்பத்தில் மாணிக்கக் கற்களை ஏலம் விடுவதற்கு முடிவு எடுக்கப்படவில்லை என்றும், அந்த சந்தர்ப்பத்தில் இந்த மாணிக்கக் கற்களை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் கட்டுப்பாட்டில் வைத்து உரிய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வது என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார அவர்கள் கூறினார்.

கருத்து தெரிவிக்கையில், தகனசாலை காணிக்கு சுரங்கம் தோண்டப்பட்டு மாணிக்கக் கற்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டது ஒரு குற்றம் என்றும், மாணிக்க மண்ணை எடுத்து மாணிக்கக் கற்களை கழுவி எடுப்பதற்கு முடிவு செய்து மாணிக்கக் கற்களை திருடன் கையில் வைப்பில் இட்டது ஒரு பெரிய தவறு என்றும், கிடைக்கப்பெற்ற மாணிக்கக் கற்களை அங்கே இருப்பது, நம்பிக்கை வைப்பது முடியுமான காரியமா என்பது சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது என்றும், வைப்பில் உள்ள மாணிக்கக் கற்களை எந்த தேரத்திலும் ஏலத்தில் விற்பனை செய்ய முடியும் என்றும், அங்கே இருப்பது கிடைத்த மாணிக்கக் கற்களா என்பதை முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டு உறுதிப்படுத்த வேண்டும் என்றும், தற்போது சுரங்கம் தகனசாலை காணிக்கு வருகிறதா என்று பார்க்க வேண்டும் என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் கூறினார்.

கருத்து தெரிவிக்கையில், அரச காணி ஒன்றுக் சுரங்கம் தோண்டுவது சட்டப்படி குற்றம் ஆகும் என்றும் அதற்க எதிராக அந்த காலத்தில் உத்தியோகத்தர்கள் மற்றும் தலைவர் நடவடிக்கைகள் மேற்கொள்ளாது இருந்துள்ளனர் என்றும், அந்த சந்தர்ப்பத்தில் இருந்து முறையான விசாரணை ஒன்று செய்யப்பட வேண்டும் என்றும், இந்த விசாரணை பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டும் என்றும், தற்போது மாணிக்கக் கற்கள் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் மாணிக்கக் கற்களை ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பில் அவசரம் காட்ட தேவையில்லை என்றும், இந்த சபையில் பிழை ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இருந்து விசாரணை மேற்கொள்வதற்கு முடிவு எடுக்க வேண்டும் என்றும், அதிகார சரபை சட்டத்தின் பிரகாரம் அரச காணி ஒன்றில் இருந்து எடுக்கப்பட்ட மாணிக்க மண்ணை அவ்வேலையிலே தடைசெய்து அந்த காணியில் இருந்து அகற்ற வேண்டும் என்றும் அதுபோல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இஸ்டம் பொல் மாணிக்க மண் அகழ்ந்து கழுவி பெற்றுக்கொள்ளப்பட்ட மாணிக்கக் கற்களை அனுமதிப்பத்திரதாரர் வசம் வழங்கப்பட்டு உள்ளது என்றும், அது போல் நடந்தது எப்படி என்பதை விசாரிக்க வேண்டும் என்றும், இங்கு 4 மாணிக்க கல் அகழ்வு சுரங்கங்களில் இருந்து 3 சுரங்க பாதைகள் வழியாக மாணிக்க மணி அகழ்ந்து எடுக்கப்பட்டு உள்ளது என்றும் அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு இல்லை என்றும், இதன் முழு விபரம் தனிப்பட்ட ரீதியில் தெரியும் என்றும், இது ஒரு சட்ட விரோதமான செயல் என்றும், இது தொடர்பாக சட்ட ரீதியாக வழங்கமுடிந்த ஆகக்கூடிய தண்டனையை வழங்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்கள் கூறினார்.

கருத்து தெரிவிக்கையில், பிரதேச சபை உறுப்பினர்கள் அடங்கிய கமிட்டி ஒன்றை உருவாக்கி சரியான அறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்வது உகந்தது என்றும், மாணிக்கக் கற்கள் அலசிய நபர்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை கமிட்டி ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்றால் அது சமூகத்திற்கு முன்மாதிரியான செயல் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்கள் கூறினார்.

கருத்து தெரிவிக்கையில், தலைவர் என்ற ரீதியில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியது இந்த பிரச்சினை தொடர்பாக தொடர்ச்சியாக அவதானம் செலுத்தப்பட்டதன் காரணத்தினால் ஆகும் என்றும், கணக்காய்வின் போது இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றி வினவுவதன் காரணத்தினாலும், இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை சட்டத்திற்கு ஏற்ப எவரேனும் வெளி நபர் ஒருவர் வேறு நபர் ஒருவரின் ஆதனங்களுக்கு உட்பிரவேசித்து கனிமவளங்களை பெற்றுக்கொண்டால் இருக்கும்

நிலை மற்றும் நபர் ஒருவருடைய அல்லாத பொது சொத்தகளுக்கு உட்பிரவேசித்து கணிமவளங்களை பெற்றுக்கொண்டால் இருக்கும் நிலை மாறுபடும் என்றும், பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் வழக்கு பதிய முடியும் என்றும், பிரதேச சபை என்ற ரீதியில் மாணிக்க கல் அகழ்வின் போது ஆரம்ப கட்டத்தில் இருந்து இரத்திணக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையை தெளிவுபடுத்தி இருப்பதாகவும் அதன் அடிப்படையில் பிரதேச சபையானது உரிய முறையில் சட்டரீதியாக செயல்பட்டு உள்ளது என்றும், இது தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் கணக்காய்வின் போது கேள்விகள் எழுப்பப்பட்டு உள்ளன என்றும், அதன் அடிப்படையில் பிரதேச சபை என்ற ரீதியில் இது தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி உள்ளது என்றும், அதன் அடிப்படையில் இது தொடர்பாக விசாரணை ஒன்று ஆரம்பித்து உரிய விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று இரத்திணக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தி உள்ளது என்றும், இந்த அனைத்த கருத்துக்களிளும் இருந்து தெரியவருவது இரத்திணக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் செயற்பாடுகளில் குறைகள் காணப்படுகின்றன என்றும், இந்த விடயம் தொடர்பாக 05 வருடங்கள் கடந்து உள்ளதால் இதன் செயற்பாடுகள் விரைவுபடுத்த வேண்டியுள்ளது என்றும், இது தொடர்பாக சாட்சிகள் சேகரித்து குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக முறைப்பாடு ஒன்றை முன்வைக்க முடியும் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மானிபுற அவர்கள் கூறினார்.

**முடிவுகள் இலக்கம் 20**

இந்த காணியில் இருந்து கிடைத்த மாணிக்க கணிம வளங்கள் தொடர்பாக குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்கு புகார் ஒன்றை பதிவுசெய்து சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்றும், ஆரம்ப கட்ட நடவடிக்கையாக குற்றவியல் தொடர்பாக விவேட நிபுனத்துவம் உள்ள சட்டத்தரணி ஒருவருக்கு கோவையை சமர்பித்து வழக்கு நடவடிக்கைகள் தொடர்வதற்கு போதிய அளவிலான சாட்சிகள் உள்ளனவா என பரிசோதித்து பெறப்படும் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வருங்கால நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

21. அதிக மழை காரணமாக தாமதமான கீழ் குறிப்பிடப்பட்டு உள்ள வேலைத்திட்டங்களின் காலத்தை 2025.11.30 ஆம் திகதியில் இருந்து 2025.12.20 ஆம் திகதி வரை நீடிப்பது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

- வெலிமழுவ பிடகும்புற கிராமம் ஊடாக எதுகல ஆராணய வரை பழுதடைந்து காணப்படும் வீதியை புனரமைப்பு செய்தல்.
- பெல்மதுள்ள கொம்போஸ்ட் நிலையத்தின் பிரவேச வீதியை அபிவிருத்தி செய்தல்.
- நீலகம சமகி வீதியை அபிவிருத்தி செய்தல்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 21**

அதிக மழை காரணமாக தாமதமான கீழ் குறிப்பிடப்பட்டு உள்ள வேலைத்திட்டங்களின் காலத்தை 2025.11.30 ஆம் திகதியில் இருந்து 2025.12.20 ஆம் திகதி வரை நீடிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

22. உள்ளூராட்சி மன்ற ஆனையாளரின் CLG/LG/07/05/08 மற்றும் 2025.11.09 ஆம் திகதியுடைய கடிதத்திற்கு ஏற்ப வரகாவத்த மாதம்பே வீதியை அபிவிருத்தி செய்வது தொடர்பாக உகந்த முடிவு ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

**முடிவுகள் இலக்கம் 22**

மேற்கூறிய பிரேரணை பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு உரிய செயற்திட்டம் அல்லாததன் காரணத்தினால் இந்த பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

23. பிரதான அமைச்சு மற்றும் பெல்மதுள்ள பிரதேச செயலகம் (கிராமிய வீதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2025) மூலம் முற்பணங்கள் ஒதுக்கப்பட்டு உள்ள ரூபா. 20 இலட்சத்திற்கு குறைவான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கு விலைமனுகோரல் வழிகாட்டிக் கோவைக்கு ஏற்ப மக்களை அடிப்படையாகள் கொண்ட நிறுவனங்களை தேர்ந்தெடுத்து ஒப்பந்தங்களை வழங்குவதற்கு பிரேரிக்கின்றேன்.

| தொ. இல | திட்டத்தின் பெயர் | அனுமதி அளிக்கப்பட்ட முற்பண பெருமதி (ரூ) |
|---|---|---|
| 1 | திப்பிபடிகல ஸ்தாலவத்த வீதியில் கொங்கிறீட் செய்யப்படாத எஞ்சிய பகுதியை கொங்கிறீட் செய்தல் மற்றும் பக்க வடிகால் தொகுதியை நிர்மானித்தல் | 973,946.76 |
| 2 | ஹத்பிலி எல்ல நீர் திட்டத்தின் குழாய்கள் பதித்துள்ள பகுதி ஒன்றில் திருத்தங்கள் மேற்கொள்ளல் | 1,179,967.87 |
| 3 | இஹல போபிட்டிய பாழுவத்த வீதியில் முன்னோக்கி அபிவிருத்தி செய்தல் | 1,919,149.94 |
| 4 | பண்டாரவத்த தெனவக இணைக்கும் வீதியில் திரு. ஆரேன் சிஞ்ஞோவின் வீட்டின் அருகில் இருந்து தெனவக பாதகட வரையிலான வீதியில் எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்தல் | 1,437,462.39 |
| 5 | தர்மரக்பித வீதி அனைக்கட்டு வீதியின் எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் நீரோடை வழியை அபிவிருத்தி செய்தல் | 967,518.86 |
| 6 | கிரிவெல்தெனிய விஹாரைக்கு அருகில் இருந்து (250 மீற்றர்) முன்நோக்க கற்கள் பாவி தார் இடுதல் | 1,441,233.27 |
| 7 | உடங்கொடை வீதியை தார் இட்டு அபிவிருத்தி செய்தல் | 1,968,555.57 |
| 8 | தொபகஸ்வின்ன சர்வோதயவின் பிரவேச வீதியில் இருந்து முன்நோக்கி தொபகஸ்வின்ன பாடசாலை அருகில் உள்ள வீதியை கொங்கிறீட் செய்தல் | 1,945,218.97 |
| 9 | சமனல உயன பிரதேசத்தின் பிரவேச வீதிக்கு தார் இட்டு மற்றும் வீதிக்கு பக்க வடிகால் தொகுதி இட்டு அபிவிருத்தி செய்தல் | 1,454,045.90 |
| 10 | பஹல கம்மெத்த பிட்டகும்புற வீதியில் அமிழ்ந்த காணப்படும் இடத்திற்கு பக்க மதில் ஒன்று நிர்மாணித்து அபிவிருத்தி செய்தல் | 994,079.67 |

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், திட்டங்கள் மேற்கொள்ளும் போது சிக்கல்கள் உள்ளன என்றும், திட்டங்களை செய்வதற்கு சங்கங்கள் விருப்பமாக உள்ளதாகவும் ஆனால் மதிப்பீடுகள் தயாரித்து திட்டங்கள் பூர்த்திசெய்து பில்கள் முன்வைத்து பணத்தை பெற்றக்கொள்வதற்க செல்லும் காலம் கூடுதலானது என்றும், இது சரிசெய்யப்பட வேண்டும் என்றும், திட்டங்களுக்க ஒப்பந்தக்காரர்கள் இருந்த போதிலும் அவர்கள் முன்வராததற்கு காரணம் பணம் கிடைக்க அதிக காலம் எடுப்பதால் ஆகும் என்றும், இந்த திட்டங்கள் இழுபறி அடைந்து செல்லும் என்பதால் இந்த நிலையை சரிசெய்து கொண்டால் திட்டங்களை வெற்றிகரமாக செய்ய முடியும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசந்த பிரேமகுமார அவர்கள் கூறினார்.

கருத்து தெரிவிக்கையில், திட்டங்கள் தொடர்பில் இதைவிட அக்கரையுடன் செயல்பட வேண்டும் என்றும், சர்வோதய வித்தியாலயத்திற்கு அடுத்த பக்கத்தில் 20 இலட்சம் தொகைக்கு கொங்கிறீட் இடப்பட்டதாகவும், இங்கே மதிப்பீடுகள் தயாரிக்கும் போது வீதி, பொது மக்களை கவனத்தில் கொள்ளாமல் திட்டங்கள் செயல்படுத்தும் போது வீதியை ஒரு மாத காலத்திற்கு மூடுவதற்கு நேரிடுவதால் பொது மக்களுக்கு பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றன என்றும், இது போன்ற இடங்களில் வீதியை விரைவாக திறக்கக் கூடிய விதத்தில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டால் வெற்றி அடையும் என்றம், இது போன்ற திட்டங்கள் தொடர்பாக மதிப்பீடுகள் தயாரிக்கும் போது வேண்டாம் வெறுப்புக்கு மதிப்பீடுகள் தயாரிக்காமல் பிரதேசத்து பொது மக்களின் ஆலோசனைகளை பெற்றுக் கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்படுமாயின் வெற்றியடையும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் கூறினார்.

கருத்து தெரிவிக்கையில், கேள்விமனுக்கள் திறக்கப்படும் போது பிரதேச சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் இவற்றிற்கு கையொப்பம் இடாமல் வெளியே செல்வதாயின் அது பிரச்சினைக்குறிய விடயம் என்றும், அதன் போது இந்த பொருட்கள் (வீதி விளக்குகள்) கால தாமதம் ஏற்படுவதால் மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் பொதுமக்களுக்கு பதில் கூறுவதற்கு கடமைப்பட்டு உள்ளோம் என்றும், அது தொடர்பாக அவதானம் செலுத்துமாறு கேட்டுக்கொள்வதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிஸாந்த குமார புத்தஆரச்சி அவர்கள் கூறினார்.

கருத்து தெரிவிக்கையில், நாங்கள் பொதுமக்களின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் கமிட்டிகளுக்கு கலந்துகொள்வதாகவும் விடயம் தொடர்பாக அறிந்துள்ள உத்தியோகத்தர்கள் கமிட்டியில் இருந்து எழுந்து சென்றவுடன் நாங்கள் முகத்திற்கு முகம் பார்த்துக்கொண்டு மாத்திரம் இருப்பதாகவும், இந்த கமிட்டிக்கு தொழிநுட்ப உத்தியோகத்தர் ஒருவரை சம்பந்தப்படுத்துமாறு செயலாளரிடம் கோரிக்கைகள் முன்வைத்த போது அந்த சந்தர்ப்பத்தில் தொழிநுட்ப உத்தியோகத்தர் திரு. இரோஷன் கலந்து கொண்டார். இதுபோன்ற உத்தியோகத்தர்களை வருங்காலத்தில் சேவையில் வைத்திருக்க வேண்டுமா என்பது பிரச்சினையாக உள்ளது என்றும், மேலும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் தொடர்புகள் பற்றி புரிதல் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், பொதுமக்கள் முன்னிலையில் கடமை புரிவதற்கு தெரியாது என்றும், கருத்து தெரிவித்தல்கள் வெறுப்பாக இருக்கின்றன என்றும், நிறுவனத்தினுள் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு உட்படாமல் இருக்க வேண்டும் என்றும், தொழிநுட்ப உத்தியோகத்தரின் நடத்தை பற்றி குறைகள் தெரிவிப்பதுடன் இது தொடர்பாக உகந்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுப்பதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் கூறினார்.

கருத்து தெரிவிக்கையில், எங்கள் பிரதேச சபையில் தொழிநுட்ப உத்தியொகத்தர் பரவிகள் 02 காணப்படுவதபகவும், புதிய தொழிநுட்ப உத்தியொகத்தர் ஒருவரை எங்களுக்கு வைத்திருப்பதற்கு இயலாத விடயம் என்றும் திரு. ஜயசிங்க அவர்கள் ஒப்பந்த அடிப்படையிலா? திரு. இரோஷன் அவர்கள் கடமை புரிவது நிரந்தர பதவி அடிப்படையில் என்றும், திரு. ஜயசிங்க அவர்களின் ஒப்பந்த காலத்தை நீடிக்காமல் இருவரையும் வைத்திருப்பது இயலாத விடயம் என்றும், இந்த காலமானது வேலைப்பழு அதிகம் உள்ள காலம் என்பதால் புதிய தொழிநுட்ப உத்தியோகத்தருக்கு பயிற்சி பெறுவதற்கு சிறிது காலம் எடுக்கும் என்பதால் திரு. ஜயசிங்க அவர்களை வைத்திருக்க வேண்டி உள்ளது என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் கூறினார்.

திட்டங்கள் செயல்படுத்தும்போது எழும் சிக்கல் நிலைமைகள் தீர்த்துக் கொள்வதற்கு இந்த கௌரவ சபையை செயற்பாட்டுக் குழுவாக கருதுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதனை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்கள் ஆமோதித்தார். (பி.ப. 12.42)

இந்த சந்தர்ப்பத்தில் விடய உத்தியோகத்தர் மூலம் திட்டங்கள், திட்டங்களின் முன்னேற்றங்கள், பில்கள் செலுத்துதல்கள், மதிப்பீடுகள் தயாரித்தல்கள் போன்றவற்றின் சிக்கல்கள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்த செயற்பாட்டுக் குழுவை பொது சபையாக கருதுவதற்காக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதனை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு.ஜீ.கே. சுமேத லக்மால் அவர்கள் ஆமோதித்தார். (பி.ப. 12.52)

**முடிவுகள் இலக்கம் 23**

பிரதான அமைச்சு மற்றம் பெல்மதுள்ள பிரதேச செயலகம் (கிராமிய வீதிகள் அபிவிருத்தி நிகழ்சித்திட்டம் 2025) மூலம் முற்பணங்கள் ஒதுக்கப்பட்டு உள்ள ரூபா. 20 இலட்சத்திற்கு குறைவான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கு விலைமனுகோரல் வழிகாட்டிக் கோவைக்கு ஏற்ப மக்களை அடிப்படையாகள் கொண்ட நிறுவனங்களை தேர்ந்தெடுத்து ஒப்பந்தங்களை வழங்குவதற்கும், இந்த திட்டங்களுக்கான பில்கள் செலுத்துதல்கள் கால தாமதங்கள் ஏட்பட்டமை தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டதன் காரணத்தினால் இந்த திட்டங்களுக்கான பில்கள் செலுத்துதல்கள் தொடர்பாக ஒப்பந்ததாரர்களுடன் தொடர்பு கொண்டு இந்த பில்கள் விரைவாக செலுத்துவதற்கு தொழிநுட்ப உத்தியோகத்தருக்கு கடிதம் வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பி.ப. 12.53 இற்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்த , கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிஸாந்த குமார புத்தஆரச்சி ஆகியோர் கௌரவ சபையில் இருந்து வெளியேறினர்.

**ii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்களின் பிரேரணைகள்**

01. இசுருகம மெத வீதி (திரு. மகிந்தவின் வீடுவரை உள்ள ) வீதியை கொங்கிறீட் செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 24**

களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி மூலம் மேற்கொள்ள முடியுமான அபிவிருத்தி பணியாயின் செயற்படுத்துவதற்கும், அதுபொல் செய்ய முடியாது என்றால் உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. ஹபுருகல தோட்டப் பிரிவு தேவாலயத்திற்கு அருகில் கீழ்நோக்கி உள்ள வீதியை கொங்கிறீட் செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 25**

களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி மூலம் மேற்கொள்ள முடியுமான அபிவிருத்தி பணியாயின் செயற்படுத்துவதற்கும், அதுபொல் செய்ய முடியாது என்றால் உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 26**

எதிர்வரும் காலங்களில் பெல்மதுள்ள பிரதேச சபைக்கு உரித்தான அனைத்து தொகுதிகளிலும் வீதி மின் விளக்ககள் பொருத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

04. பரகெடிய வீதியை கொங்கிறீட் செய்வதற்கு (திரு. அபேரத்ன வீட்டின் அருகில் உள்ள மலைப்பாங்கான பகுதி) பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 27**

களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி மூலம் மேற்கொள்ள முடியுமான அபிவிருத்தி பணியாயின் செயற்படுத்துவதற்கும், அதுபொல் செய்ய முடியாது என்றால் உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

05. நிரல்கம காலனி வீதியின் இருபுறங்களையும் தொழிலாளிகளைக் கொண்டு சுத்தம் செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 28**

நிரல்கம காலனி வீதியின் இருபுறங்களையும் தொழிலாளிகளைக் கொண்டு சுத்தம் செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**iii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களின் பிரேரணைகள்**

01. 50 ஏக்கர் பொது குளிக்கும் பீலியை புனரமைப்பு செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 29**

களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி மூலம் மேற்கொள்ள முடியுமான அபிவிருத்தி பணியாயின் செயற்படுத்துவதற்கும், அதுபொல் செய்ய முடியாது என்றால் உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. பெரெண்டுவ தோட்ட வீடுகளுக்கு உரித்தான பொது கிணற்றை புனர்நிர்மானம் செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 30**

களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி மூலம் மேற்கொள்ள முடியுமான அபிவிருத்தி பணியாயின் செயற்படுத்துவதற்கும், அதுபொல் செய்ய முடியாது என்றால் உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. லெல்லொபிட்டிய ஹெட்டிகந்த வீதியில் உள்ள வடிகாலை துப்புறவு செய்வதற்கு உரிய நிறுவனங்களை தெளிவுபடுத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 31**

லெல்லொபிட்டிய ஹெட்டிகந்த வீதியில் உள்ள வடிகாலை துப்புறவு செய்வதற்கு உரிய நிறுவனங்களை தெளிவுபடுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

04. கல்அஸ்ஸாபொல வீதியின் குருக்கு வீதி ஒன்றான கே.கே. ஹேமசந்திர அவர்களின் வீட்டிற்கு மற்றும் இன்னும் பல வீடுகளுக்கு உள்ள வீதியில் உள்ள வடிகால் குழாய்க்கு சிலின்டர் இட்டு புனர்நிர்மானம் செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 32**

களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய கல்அஸ்ஸாபொல வீதியின் குருக்கு வீதி ஒன்றான கே.கே. ஹேமசந்திர அவர்களின் வீட்டிற்கு மற்றும் இன்னும் பல வீடுகளுக்கு உள்ள வீதியில் உள்ள வடிகால் குழாய்க்கு சிலின்டர் இட்டு புனர்நிர்மானம் செய்வதற்கு பிரதேச சபையின் நிதி மூலம் மேற்கொள்ள முடியுமான அபிவிருத்தி பணியாயின் செயற்படுத்துவதற்கும், அதுபோல் செய்ய முடியாது என்றால் உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**iv. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார அவர்களின் பிரேரணைகள்**

01. குட்டாபிட்டிய தொகுதியில் குட்டாபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் பெல்மதுள்ள குட்டாபிட்டிய வீதியில் ரிவஸ் வளைவிற்கு கீழ் உள்ள பகுதி ஏதேனும் ஒரு விதத்தில் மண்சரிவிற்கு உட்பட்டு உள்ளது. இது மாகாண சபையினால் நிர்வாகிக்கப்படும் வீதி ஒன்று ஆகும். வெகு விரைவாக இந்த இடத்திற்கு பக்க சுவர் ஒன்று இட்டு இந்த இடத்தை பாதுகாக்கு வேண்டும். இல்லை என்றால் வீதி கழன்றுபோகும் அவதானம் காணப்படுகிறது. முாற்றீடான வீதிகள் இல்லாததன் காரணத்தினால் இது பற்றி அவதானத்தை செலுத்துவது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 33**

களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய இந்த பிரேரணையை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. நாரங்தொட திலெனதரு விளையாட்டு சங்கத்தின் வொலிபோல் விளையாட்டு மைதானத்திற்கு இரவு நேரங்களில் விளையாடுவதற்கு இயலுமான விதத்தில் 04 மின்விளக்குகள் பெற்றுக்கொடுக்குமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 34**

முற்பண நிலமைகளை கருத்தில் கொண்டு நாரங்தொட திலெனதரு விளையாட்டு சங்கத்தின் வொலிபோல் விளையாட்டு மைதானத்திற்கு இரவு நேரங்களில் விளையாடுவதற்கு இயலுமான விதத்தில் 04 மின்விளக்குகள் பெற்றுக்கொடுப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. குட்டபிட்டிய பிரிவில் பொல்கஸ்வத்த மேல்வீதி அதிகஅளவில் மண்அரிப்பிற்கு உள்ளாகி உள்ளது. அவர்கள் கோருவது பெகோ இயந்திரத்தை பயன்படுத்தி அந்த வீதியை புனர்நிர்மானம் செய்து தரும்படி பிரேரிக்கின்றேன். (அங்கே 15 குடும்பங்கள் வரை வாழ்கின்றனர் அத்துடன் பெரிய தேயிலை தோட்டங்களும் காணப்படுகின்றன)

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 35**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பெகோ இயந்திரத்தை பயன்படுத்தி அந்த வீதியை புனர்நிர்மானம் செய்ய முடியும் என்றால் குட்டபிட்டிய பிரிவில் பொல்கஸ்வத்த மேல்வீதியை பெகோ இயந்திரத்தை பயன்படுத்தி புனர்நிர்மாணம் செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**அவசர பிரேரணைகள்**

**கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

01. 2025 ஆம் ஆண்டில் மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் மூலம் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் கூறுகளின் கீழ் முற்பணங்கள் ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட வெலிமழுவ கிராமத்திற்கு பிரவேசிக்கும் தொடம்கம எல வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா. 1,712,409.02 தொகை ஒப்பந்தக்காரரான வெலிமழுவ கமநல சங்கத்திற்கு விடுவிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 36**

2025 ஆம் ஆண்டில் மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் மூலம் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் கூறுகளின் கீழ் முற்பணங்கள் ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்ட வெலிமழுவ கிராமத்திற்கு பிரவேசிக்கும் தொடம்கம எல வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா. 1,712,409.02 தொகை ஒப்பந்தக்காரரான வெலிமழுவ கமநல சங்கத்திற்கு விடுவிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் மூலம் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் துணை v கூறுகளின் கீழ், கீழ் குறிப்பிடப்பட்டு உள்ள திட்டங்கள் கொள்முதல் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் உரிய மக்களை அடிப்படையாகள் கொண்ட நிறுவனங்களை இணங்கண்டு ஒப்பந்தங்களை மேற்கொள்வது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

1. கோணகுபுர சந்தியில் எதுகல வரையிலான வீதியை நிர்மாணித்தல் - ரூ. 1,924,378.94
2. மோரதொட காலணி வீதியில் இருந்து திரு. சமிந்தவின் வீட்டின் அருகில் இருந்து மயானபூமி அருகில் வடிகால் குழாய் நிர்மாணித்தல் - ரூ. 1,881,669.70
3. கனேகம சந்தியில் இருந்து ரில்ஹேனவத்த இற்கு உள்ள வீதியில் அத்தியவசி வகுதிகளுக்கு தார் இடல் - ரூ. 1,181,791.34

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 37**

மேற்கூறிய திட்டங்கள் கொள்முதல் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் உரிய மக்களை அடிப்படையாகள் கொண்ட நிறுவனங்களை இணங்கண்டு ஒப்பந்தங்களை மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

3. திட்டா புயல் காரணமான அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்த மக்களுக்காக சமைக்கப்பட்ட உணவு வழங்கியதற்கு தேவையான பொருட்கள் பெற்றுக்கொண்டதற்கான பில்கள் செலுத்துதல் தொடர்பாக பெல்மதுள்ள பிரதேச செயலகம் இணக்கம் தெரிவித்து உள்ளது. ஆனால் அவ் பில் செலுத்துதல்கள் மேற்கொள்ளப்படாவிட்டால் அவற்றை பிரதேச சபை நிதியத்தல் இருந்து செலுத்துவதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 38**

திட்டா புயல் காரணமான அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்த மக்களுக்காக சமைக்கப்பட்ட உணவு வழங்கியதற்கு தேவையான பொருட்கள் பெற்றுக்கொண்டதற்கான பில்கள் பெல்மதுள்ள பிரதேச செயலகம் செலுத்தாவிட்டால் அவ் பில்களை பிரதேச சபை நிதியத்தல் இருந்து செலுத்துவதற்கான அனுமதியை வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்களின் பிரேரணைகள்**

01. பெல்மதுள்ள காமரங்கபிட்டிய ஏ.கே. ஹர்ஷனி மதுஷிகா என்பவரின் வீட்டின் அருகில் பிரதான வீதியின் எல்லை சென்ற மழை காலத்தில் உடைந்து விழுந்து உள்ளது. இது அபாயகரமான நிலை என்பதால் அபாய நிலையை தவிர்த்துக் கொள்வதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்து ஆலோசித்து பக்க மதில் ஒன்றை நிர்மாணிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த இடத்தில் பக்க மதில் ஒன்றை நிர்மாணிப்பதற்கு எமது பிரதேச சபைக்கு இயலுமை இல்லாது என்பதால் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்து ஆலோசித்து பக்க மதில் ஒன்றை நிர்மாணித்து அபாய நிலையை குறைத்துக் கொள்வதற்கு பக்க மதில் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் கூறினார்.

**முடிவுகள் இலக்கம் 39**

இந்த பிரேரணை தொடர்பாக உரிய நிறுவனங்களை தெளிவுபடுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. சிறியானி வீரசேகர அவர்களின் பிரேரணைகள்**

01. பாதகட துபதெனிய வீதியில் இருந்து கொடகமவிற்கு பிரவேசிக்கும் வீதியில் திரு. சானகவின் வீட்டின் அருகில் கல் அமுன வேல்ல ஊடாக போடப்பட்டு இருக்கும் வடிகால் குழாய் உடைய வீதியின் பகுதி கடந்த மழை காரணமாக உடைந்து போய் உள்ளது இதனால் வாகன போக்குவரத்திற்கு இடையூறுகள் ஏற்பட்டு உள்ளது. இந்த வீதியை புனர்நிர்மாணம் செய்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 40**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு இந்த பிரேரணை தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்களின் பிரேரணைகள்**

01. அலுபொதவில் இருந்து இரத்தினபுரி வரை உள்ள பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ள ஹபுருகல, மெதவத்த, பேரதென்ன, கலுகல்தென்ன, அரம்பபேவத்த என்ற கிராமங்களில் சுமார் 100 குடும்பங்கள் வரையில் வாழ்கின்றனர். அசாதாரண காலநிலை காரணமாக அந்த வீடுகளில் பிளவுகள் ஏற்பட்டு உள்ளதுடன், அலுபொத இரத்தினபுரி பிரதான வீதியில் ஹபுருகல மெதவத்த வீதியானது தற்போது மன்சரிவிற்கு உட்பட்டு உள்ளதால், புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகத்தினால் 1994.02.10 ஆம் திகதி ஆய்வு அறிக்கையில் இந்த பிரதேசம் மண்சரிவிற்கு உட்படக்கூடிய பிரதேசம் என்று எச்சரிக்கை வழங்கி உள்ளது. இது தொடர்பாக உகந்த நடவடிக்கை ஒன்று எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், 1994, 1982, 1989 ஆம் ஆண்டுகளில் இந்த மலைப்பகுதிகளில் பிளவுகள் ஏற்பட்டு வீடுகளில் பிளவுகள் ஏற்பட்டு, நிலப் பகுதிகளில் மண் சரிவுகள் ஏற்பட்டு, அதிக மழை காரணமாக ஹபுருகல பேரதென்ன மெதவத்த பகுதி மண் சரிவிற்கு உட்பட்டு உள்ளது. புதிதாக கட்டப்பட்டு உள்ள வீடுகளும் பிளவுகளுக்கு உட்பட்டு உள்ளன. இந்த பிரதேசம் 1994, 1993 ஆம் ஆண்டுகளில் மாவட்ட செயலாளர் இந்த பிரதேசங்களில் அத்துமீறிய அகழ்வுகள் தொடர்பாக எழுத்து மூலமாக உரிய நபர்கள் தெளிவுபடுத்தி அவ் அனுமதிப்பத்திரங்களை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு இருந்தன. கடந்த வருடங்களில் இந்த நடவடிக்கைகள் நடந்த போது கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. சோமரத்ன உள்ளிட்ட உறுப்பினர்கள் இந் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தினர். தற்போது ஆய்வு சுரங்கங்கள் என்ற ரீதியில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு அகழ்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், இந்த கிராமத்தில் சுமார் 100 குடும்பங்கள் வரை வாழ்வதால் அவர்கள் பாரிய அவதானத்திற்கு ஆளாகி உள்ளனர். இந்த வீடுகளில் பிளவுகள் ஏற்பட்டு உள்ளதாலும், சேற்று நீர் வடிந்து செல்வதாலும், நீர் ஊற்றுக்கள் உருவாகி இருத்தல் போன்ற மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளன என்றும், இந்த பிரதேசம் தொடர்பாக அவதானம் செலுத்தி மக்களும்

நியாயமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் கூறினார்.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்கள் பி.ப. 01.56 மணிக்கு சபையில் இருந்து வெளியேறினார்.

**முடிவுகள் இலக்கம் 41**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு இந்த பிரேரணை தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்கள் பி.ப. 02.00 மணிக்கு சபையில் இருந்து வெளியேறினார்.

**07. செயற்பாட்டுக் குழுக்களின் அறிக்கைகள் முன்வைத்தல்கள்**

2025.12.01 ஆம் திகதி நடைபெற்ற தொழிநுட்ப சேவைகள் குழுவின் கூட்ட அறிக்கை, 2025.11.20 ஆம் திகதி நடைபெற்ற நூலக ஆலோசனை குழுவின் கூட்ட அறிக்கைகள் சபைக்கு முன்வைக்கப்பட்டன.

**08. பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை கௌரவ சபைக்கு முன்வைத்தல்**

2025.10.01 ஆம் திகதியில் இருந்து 2025.10.31ஆம் தகதி வரையிலான மாதத்திற்கு உரிய பிரதேச சபையின் கொடுப்பனவு அறிக்கை அனுமதி வழங்கல் மற்றும் பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை என்பன சபைக்கு முன்வைக்கப்பட்டன.

கணக்காய்வு நாயகத்தின் 2025.10.31 ஆம் திகதியும் SGLG/RT/B/PMPS/2025 இலக்கமும் கொண்ட நிதி செயற்பாட்டு கணக்காய்வு அறிக்கை மற்றும் SGLG/RT/B/PMPS/5/2025/AQ/07 இலக்கமும் 2025.10.10 ஆம் திகதியும் கொண்ட நிதி செயற்பாட்டு கணக்காய்வு அறிக்கைகள் சபைக்கு முன்வைக்கப்பட்டன.

பெல்மதுள்ள பிரதேச சபையின் உள்ளக கணக்காய்வு அலகின் PEL/PS/ACC09 மற்றும் 2025.10.17 ஆம் திகதியும் கொண்ட 2025 ஒக்டோபர் மாதத்தின் உள்ளக கணக்காய்வு அறிக்கை சபைக்கு முன்வைக்கப்பட்டது.

வேறு விடங்கள்

- பிரதேச சபை உறுப்பினர்களின் பிரத்தியோக தெளிவுபடுத்தல்கள்
- பிரதேச சபைத் தலைவரின் நன்றியுரை

இன்று பிரதேச சபைக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கௌரவ தலைவர் தனது நன்றி உரையை முடித்துக் கொண்டார்.

பி.ப. 02.30 மணி அளவில் சபைக் கூட்டம் முடிவடைந்தது.

தலைவர்<br>
பிரதேச சபை<br>
பெல்மதுள்ள